உ

சிவமயம்

ஸ்ரீ கொப்புடையம்மன் துணை

ஸ்ரீ கொப்புடையம்மன்

கோடி அருச்சனை விமர்சனம்

காரைக்குடி மாதர்சங்கத் தலைவி

அரு. நா. வள்ளியம்மை ஆச்சி

இயற்றியது.

வெளியிடுவோர் :

திருநெறிக் கழகம் :: காரைக்குடி.

உ
சிவமயம்

வான்உலகும் மண்உலகும் வாழ, மறை வாழ,
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க,
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

பொன்னே! வருக; அமரர் தொழும்
பூவே! வருக; பூ ஈன்ற
அன்னே! வருக; அறம் வளர்த்த
அணங்கே! வருக; அருள் அளிக்க
இன்னே வருக; இமயமலை
ஈன்றாள்! வருக; எழில் காரை
மன்னே! வருக; கொப்புடைய
மாதா! வருக, வருகவே.

ஓம்.

ஸ்ரீ கொப்புடைய அம்மன்

கோடி அருச்சனை அலங்காரம்

திருவோங்குங் காரைநகர் சிறப்போங்கக் காத்தருளுங்
கொப்புடைய நாயகிக்குக் கோடிஅருச் சனைசெய்ய
இப்புவியின் உயிரினங்கள் இடர்இன்றி வாழஎன்றே
தேவிஅருள் வேண்டித் திருநெறிக் கழகத்தார்
தேவி திருவருளால் திருக்கூட்டம் கூடுதற்கு
தெய்வ மணம்வீசும் திருமேல மடந்தனிலே
வாரவழி பாடு வழக்கமாச் செய்துவரும்
மாதர்கள் சங்கத்தார் மகிழ்வுடனே முன்வந்து
கோலங்கள் பலவரைந்து குங்குமப் பொட்டுவைத்து
சீலமாக் காவியதும் தீட்டிச்சிறப்பாக

மாணிக்கக் கோலங்கள் மங்களமாச் செய்திருந்தார்
அஷ்ட இலக்ஷ்மிகளும் அங்கே குடிபுகுந்தார்
இஷ்டமுடன் பக்தர்கள் எல்லோரும் வாழ்த்தொலிக்க
காரைநகர் மக்களெலாம் களிப்புடனே வந்திருந்து
சீரை வழங்கும்உயர் செம்மை நலங்காட்டும்
கோடிஅர்ச்சனையாலே குவலயமெல் லாமகிழக்
கூடிப் பணிபுரியக் குழுஒன்றும் அமைத்தார்கள்
நாடு,மக்கள் நலம்பெறவே நல்லதொரு நாட்குறித்துக்
கோடிநாம அர்ச்சனையைக் குறித்தபடி தொடங்குதற்கு
மேல மடத்து விநாயகரின் திருவருளால்

தில்லைச் சிதம்பரரின் திருக்கண் கருணையினால்
மன்னுபுகழ் நிலமகட்கு மங்களங்கள் செய்தார்கள்
வேதியரைக் கூட்டி விமரிசையாய்ச் செய்தார்கள்
அந்தணரைக் கூட்டி அருமையாய்ச் செய்தார்கள்
நகரமக்கள் எல்லோரும் நாவாரத் துதித்துநிற்கத்
திருநெறிக் கழகத்தார் சிறப்புடனே செய்தார்கள்
வெள்ளிஉயர் கேடகத்தில் வீற்றிருந்தாள் கொப்பாத்தாள்
வெள்ளியுடன் செம்பொன்னும் விளங்குநவ ரத்தினமும்
மந்திர கும்பத்துடன் வார்த்துமனம் களித்தார்கள்
மந்திரங்கள் எல்லாம் வரன்முறையாய்ச் சொன்னார்கள்

ஆகம நெறிப்படியே அபிஷேகம் செய்தார்கள்
பாலால் அபிஷேகம் பக்தியுடன் செய்தார்கள்
பழத்தால் அபிஷேகம் பாங்குடனே செய்தார்கள்
கவுரி இளநீரும் காசிப்பூர் பன்னீரும்
சிவனார் தேவிக்குத் திருமுழுக்குச் செய்தார்கள்
சந்தனத்தால் அபிஷேகம் தாட்டிகமாச் செய்தார்கள்
விபூதி அபிஷேகம் விமரிசையாய்ச் செய்தார்கள்
அன்ன அபிஷேகம் அருமையாய்ச் செய்தார்கள்
கங்கை அபிஷேகம் கண்களிக்கச் செய்தார்கள்
பொற்ஜரிகைக் கண்டாங்கி பொருத்தமுறத் தேர்ந்தெடுத்து

அற்புதமா அம்மனுக்கு அலங்காரம் செய்தார்கள்
வயிரநகை அலங்காரம் வகைவகையாச் செய்தார்கள்
தங்கநகை அலங்காரம் தக்கபடி செய்தார்கள்
மலராலே அலங்காரம் மனம்களிக்கச் செய்தார்கள்
பொன்னாலே அலங்காரம் புதுமுறையாய்ச் செய்தார்கள்
ஐந்தடுக்குத் தீபங்கள் அழகாகக் காட்டியதும்
ஏழடுக்குத் தீபங்கள் எடுப்பாகக் காட்டியதும்
பத்தடுக்குத் தீபங்கள் பாங்காகக் காட்டியதும்
மக்கள் திரள் வந்துவந்து வணங்கிநின்ற ஓவியமும்
சனங்கள் திரள்திரளாய்த் தலைவணங்கி நின்றதுவும்

அரும்பு மலர்தூவி அர்ச்சனைகள் செய்ததுவும்
பூத்தமலர் இட்டுப் புகழ்நாமம் சொல்லியதும்
கோடி மலரெடுத்து தொற்றமது ஏத்தியதும்
அறுசுவை நைவேத்தியம் அன்பாகப் படைத்ததுவும்
தேசிகர் பலர்கூடித் தேவாரம் பாடியதும்
வேதியர்கள் எல்லோரும் வேதங்கள் ஓதியதும்
பூமாலைக் குள்ளமணம் பொன்மாலைக்கு இல்லைஎன்று
பாமாலை பாடிமக்கள் பக்திநிலை உற்றதுவும்
கண்டுகேட்டு உண்டவர்கள் கணக்கில் அடங்காது
அடிபணிந்து நின்றமக்கள் அளவில் அடங்காது

கும்பிட்டு நின்றமக்கள் கோடிக்கு மேலிருக்கும்
இப்புவியில் இந்தவிதம் ஈரிரண்டு மாதங்கள்
கொப்புடைய அம்மனுக்குக் கோடி அர்ச்சனைதான்
செய்துவரும் திருப்பணியில் சிறப்பாக நாடோறும்
பூவாலே தோரணங்கள் பூத்தமலர்க் கொட்டகையாம்
மலராலே அலங்காரம் மலர்மாலைக் கொட்டகையாம்
கணபதிக்கு அலங்காரம் கண்களிக்கச் செய்தார்கள்
கறுப்பருக்கு அலங்காரம் கலைமணக்கச் செய்தார்கள்
விசுவேசர் சோடினையும் விசாலாட்சி ஓவியமும்
பழநிமலை ஆண்டவர்க்குப் பாங்கான அலங்காரம்

முருகனுடன் தெட்சணா மூர்த்திக்கு அலங்காரம்
வயிரவ நாதருக்கு வாகான சோடினையும்
சந்தனக் காப்பழகு தக்கபடி தினந்தோறும்
கருத்தாகச் செய்தார்கள் கலைதிகழச் செய்தார்கள்
வெள்ளி விளக்கெரிய விசைவிசிறி தான்சுழல
உள்ளம் வியப்படைய ஒப்பனைகள் பலசெய்து
திருக்கோவில் மண்டபத்தில் தெய்வ ஒளிவீசத்
திருப்பணிகள் செய்தார்கள் திருநெறிக் கழகத்தார்
அம்பிகையின் திருமுன்னே ஆகம நெறிப்படியே
அந்தணர்கள் வேதியர்கள் ஆன்றமறை வாணர்

ஒப்பரிய கணபதிக்கு ஓமம் வளர்த்தார்கள்
அன்னைபரா சக்தியவள் அருள்வேண்டி பக்தியுடன்
அகண்ட பஜனையதை ஆர்வமுடன் செய்தார்கள்
தேவாரப் பாவோடு திருவா சகத்தேனும்
அருள்கனிந்த அருட்பாவும் அபிராமி அந்தாதி
திருமூலர் மந்திரமும் திருப்பாவை இசையமுதும்
கந்தர் அலங்காரம் கந்தர்அனுபூதி எலாம்
பகலிரவு எண்ணாமல் பக்தியுடன் பாடியதும்
நகரத்துப் பெண்களெல்லாம் நன்மை வளர்ந்தோங்க
மாதர்கள் சங்கத்தார் மங்களங்கள் வளர்ந்தோங்க

நாமா வளிபலவும் நலமுறவே பாடியதும்
சக்தி அருள்வளரச் சதுர்வேதம் ஓதியதும்
பக்தி பெருகிவர பாசுரங்கள் பாடியதும்
நாயகியின் அருட்செயலை நல்லதொரு பொருளாக்கி
நாடகமாகக் காட்டி நடனங்கள் வைத்ததுவும்
அம்பிகைக்கு அத்தனையும் அன்புடனே செய்தார்கள்
அருள்வழங்கும் அம்மனுக்கு அகண்டபெரும் மாவிளக்கு
மகிமையுள்ள அம்மனுக்கு மாவிளக்கு வைப்பதற்கு
நகரத்துப் பெண்களெல்லாம் நாட்டமுடன் வந்தார்கள்
அகிலத்துப் பெண்கள் எல்லாம் அணிஅணியாய் வந்தார்கள்

பட்டுப்பா வாடைகட்டிப் பாவையர்கள் வந்தார்கள்
கண்டாங்கிப் பட்டுடுத்திக் கன்னியர்கள் வந்தார்கள்
ஜரிகையுள்ள பட்டுடுத்தி தாய்மார்கள் வந்தார்கள்
தங்கநகை யணிந்து தங்கையர்கள் வந்தார்கள்
வயிர நகையணிந்து மங்கையர்கள் வந்தார்கள்
மாவிளக்கு ஏற்றியதும் மக்கள்வந்த ஓவியமும்
திருவிளக்கு ஏற்றியதும் தேசமக்கள் வந்ததுவும்
கண்டுமனம் களித்தவர்கள் கணக்கில் அடங்காது
இன்பமுறப் பார்த்தவர்கள் எண்ணில் அடங்காது
மாவிளக்குஜோதிகண்டுமனம்குளிர்ந்தாள்கொப்புடையாள்

வாரி நிதிகொடுக்க வரிசையுற வந்தார்கள்
தேடி நிதிகொடுக்க திரளாக வந்தார்கள்
கோடான கோடிமக்கள் கும்பிட்டு மகிழ்ந்தார்கள்
அடுத்தவூர் மக்களெல்லாம் அயராமல் வந்தார்கள்
பக்கத்து சனங்களெல்லாம் பரவசமாய் வந்தார்கள்
கொப்புடைய நாயகிக்குக் கோடி அர்ச்சனையை
கோப்பாக முடித்தார்கள் குறித்தபடி செய்தார்கள்
கைலாச வாகனத்தில் காட்சிதரப் பவனிவந்தாள்
பாங்காகத் தேவி பல்லக்கில் ஏறிவந்தாள்
உற்சவசாந்தி கொண்டு ஊஞ்சலிலே வீற்றிருந்தாள்

தேவி கொலுவிருந்தாள் தேசமக்கள் மகிழ்ந்திருந்தார்
திருவளர அருள்புரிந்தாள் தேவிதிரு கொப்புடையாள்
திருநெறிக் கழகத்தார் திருப்பணிகள் செய்தார்கள்
அருச்சனைக் குழுவினர் அரும்பணிகள் செய்தார்கள்
சன்மார்க்க சங்கத்தார் தக்கபணி செய்தார்கள்
மாதர்கள் சங்கத்தார் மகிழ்ந்துபணி செய்தார்கள்
தேவி திருவருளால் தேசம் செழித்துயர
உலகத்து மக்களுக்கு ஒப்பற்ற ஞானத்தை
ஊட்டி வளர்த்துவிட்டாள் உலகீன்ற ஈசுவரியாள்
கொப்புடைய நாயகி திருவடிகளே சரணம் 130

———

கோடிநாம அருச்சனையில் கூடிநிற்கும் தேவி
கூடிநிற்கும் மக்களையே பாடவைக்கும் தேவி
மகரத்தில் எண்கிரக வாசமுறல் கண்டு
மகத்துவம் சேர் நின்னருளால் மாசகலக்கண்டு (கோடி)
நாலுபக்கம் வேதியர்கள் நாமம் சொல்லக்கூடி
பாதமதில் பூஜைசெய்த வாசமலர் கோடி (கோடி)
கடமையுள்ள மக்கள்மனக் கவலையெல்லாம் மாற்றி
கண்களிக்க அலங்கார வைரநகை சாற்றி (கோடி)
செட்டிமார்கள் நாட்டினிலே சிறப்பனைத்தும் மேவி
திசையனைத்தும் போற்றி செய்யும் கொப்புடையதேவி(கோடி)
சீர்மிகுந்த காரைநகர் திருநெறிக் கழகம்
சிறப்புடன் விளங்கிடச் செய்திடுமே உலகம் (கோடி)

இயற்றியவர்.
சுப. அன்னபூரணி ஆச்சி,
மாதர்சங்க உபதலைவி.

உலகெலாம் வாழ்க; கொப்பை
உடையவள் வாழ்க; பக்தி
வலமிகு நல்லோர் வாழ்க;
மன்னுபல் உயிர்கள் வாழ்க;
நலமிகு தருமம் வாழ்க;
நற்றமிழ்க் கலைகள் வாழ்க;
நிலமிசை அன்புசெய்வோர்
நித்தலும் வாழ்க, வாழ்க!

திருமகள் அச்சகம்,
காரைக்குடி.